- பணியினை செய்வோம் - பண்பினை வளர்ப்போம் -

பட்டுக்கோட்டை நகராட்சி

குரோதி வருடம் புரட்டாசி மாதம் 31-ம் தேதி திருவள்ளுவராண்டு 2055 (2024-ம் ஆண்டு அக்டோபர் 17-ம் தேதி) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவசரக்கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. மேற்படி, நகர்மன்ற கூட்டத்திற்கு அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பட்டுக்கோட்டை.
நாள்: 15.10.2024

நகர்மன்ற தலைவர்,
பட்டுக்கோட்டை நகராட்சி.

## பொருள் எண்:1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களுக்கு மினி போஸ்ட் (Mini Post) பொருத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு 15.10.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ, எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | சதவீதம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களுக்கு மினி போஸ்ட் (Mini Post) பொருத்தும் பணிகள் மேற்கொள்ளுதல் | எஸ்.கணேசன், பட்டுக்கோட்டை | 0.18% குறைவு | 20.00 லட்சம் |
| | | சாய் அன் கோ பட்டுக்கோட்டை | 2.00% அதிகம் | |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள, திரு எஸ்.கணேசன், பட்டுக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு: | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள, திரு.எஸ்.கணேசன், பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>( ந.க.எண்: 2204/2023 /இ2) |

**தீர்மான எண்..262. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண்:2

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிக்குட்பட்ட தஞ்சாவூர் சாலை, நாடியம்மன் கோவில் சாலை மற்றும் இதர முக்கியமான சாலைகளில் போதமான வெளிச்சம் இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு சாலையின் மத்தியில் 100 எண்ணிக்கைகள் இரட்டை மின்கம்ப விளக்குகள் பொருத்தும் பணிக்கு (Centre Median Pole) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.22.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு: | மேற்குறிப்பிட்ட முக்கியமான சாலைகளில் போதுமான வெளிச்சம் இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு சாலையின் மத்தியில் இரட்டை மின்கம்ப விளக்குகள் (Centre Median Pole) அமைக்கப்பட வேண்டியது அவசியமும் அத்தியாவசியமும் ஆகிறது. எனவே, மேற்கண்ட இடங்களில் 100 எண்ணிக்கைகள் இரட்டை மின்கம்ப விளக்குகள் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.22.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>( ந.க.எண்: 2204/2023 /இ2) |
|---|---|

**தீர்மான எண்..263..** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்:3

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிக்குட்பட்ட அதிராம்பட்டிணம் சாலை, அறந்தாங்கி சாலை, நகராட்சி உரக்கிடங்கி மற்றும் இதர முக்கியமான சாலைகளில் போதமான வெளிச்சம் இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு சாலையின் மத்தியில் 100 எண்ணிக்கைகள் இரட்டை மின்கம்ப விளக்குகள் பொருத்தும் பணிக்கு (Centre Median Pole) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.22.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு: | 1. மேற்குறிப்பிட்ட முக்கியமான சாலைகளில் போதுமான வெளிச்சம் இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு சாலையின் மத்தியில் இரட்டை மின்கம்ப விளக்குகள் (Centre Median Pole) அமைக்கப்பட வேண்டியது அவசியமும் அத்தியாவசியமும் ஆகிறது. எனவே, மேற்கண்ட இடங்களில் 100 எண்ணிக்கைகள் இரட்டை மின்கம்ப விளக்குகள் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.22.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>( ந.க.எண்: 2204/2023 /இ2) |
|---|---|

**தீர்மான எண்..264..** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம் / S. சண்முகபிரியா, எம்.சி.ஏ.,
நகர்மன்ற தலைவர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி.